**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் புதன்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் ஆவணி மாதம் 04-ம் நாள்)**

**இ.ம.எண்.1/2025 in அசல் வழக்கு எண்.47/2025**

K.P.கருணாமூர்த்தி

(குடும்ப மேலாளர்) ------- மனுதாரர் / வாதி

/எதிர்/

1. L.அண்ணாமலை

2. L.பழனிச்சாமி -------- எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது 28.07.2025-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.R.அண்ணாமலை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.செந்தில்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பில் எடுத்துரைத்த வாதுரையை கேட்டும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.,

**உத்தரவு**

இம்மனு உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் படி, ஆணையர் நியமனம் செய்து, மனு 3-வது அயிட்டச் சொத்தில் அமைந்துள்ள நிலத்தடி நீர் பைப்லைன் மற்றும் மனு சொத்துக்களின் இயற்கையமைப்பு மற்றும் சுற்றுப்புறங்களை பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை மற்றும் புகைப்படம் தாக்கல் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.**

தாவா சொத்து மனுதாரரின் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மனு 1-வது அயிட்ட சொத்திலிருந்து 2 வது அயிட்ட சொத்திற்கு தாவா 3 வது அயிட்ட சொத்தின் வழியாகவே நிலத்தடி நீர் குழாய் மூலமாக தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. இந்த

வசதியுரிமை மனுதாரரின் ஆவணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வசதியுரிமை 13 ஆண்டுகளாக எவ்வித இடையூறும் இல்லாமல் மனுதாரரும் அவரது முன் உரிமையாளர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். மனுதாரர் அயிட்டம்-1 சொத்தில் தென்னை மரங்கள் நடுவதற்கு ஏற்பாடு செய்து வருகிறார். தற்போது எதிர்மனுதாரர் அயிட்டம்-3 ன் வழியாக நிலத்தடி நீரை எடுத்துச் செல்லும் வசதியுரிமையை தடுத்து இடையூறு செய்து வருகிறார். எனவே, தாவா 1-ம் அயிட்டச் சொத்திலிருந்து 2-வது அயிட்ட சொத்திற்கு 3-ம் அயிட்டச் சொத்தின் வழியாக நிலத்தடி நீர் குழாய் மூலமாக மட்டுமே தண்ணீர் கொண்டு செல்ல முடியும் என்பதை நீதிமன்றத்திற்கு தெரிவிக்க தாவா 1 முதல் 3 அயிட்டச் சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகும். எனவே, நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஆணையர் நியமனம் செய்து, மனு 3-வது அயிட்டச் சொத்தில் அமைந்துள்ள நிலத்தடி நீர் பைப்லைன் மற்றும் மனு சொத்துக்களின் இயற்கையமைப்பு மற்றும் சுற்றுப்புறங்களை பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை மற்றும் புகைப்படம் தாக்கல் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

நீதிமன்ற ஆணையர் நியமிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட பு.க.ச.எண்.19/5-ல் உள்ள கிணற்றில் இருந்து பு.க.ச.எண்.19/3-க்கு தாவா 1வது அயிட்டச் சொத்தின் வழியாக PVC பைப்லைன் மூலமாக தண்ணீர் கொண்டு செல்வதை குறிப்பிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என எதிர் மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5. தீர்வு**

**5.1** அசல் வழக்கானது மனுதாரர் / பிரதிவாதியால் எதிர்மனுதாரருக்கு எதிராக வசதியுரிமையின் படி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.2** மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1-ம் அயிட்ட சொத்திலிருந்து, 2-வது அயிட்ட சொத்திற்கு எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 3-ம் அயிட்ட சொத்தின் வழியாக

நிலத்தடியில் பைப் லைன் அமைத்து தண்ணீர் கொண்டு செல்வதாகவும், இந்த வசதியுரிமை மனுதாரரின் ஆவணங்களிலும் கண்டுள்ளதாகவும், 13 ஆண்டுகளுக்கு மேலாக மேற்படி வசதியுரிமை மனுதாரருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வருவதாகவும், தற்போது எதிர்மனுதாரர் தண்ணீர் கொண்டு செல்லமுடியாமல் இடையூறு செய்வதாக கூறப்பட்டுள்ளது.

**5.3** ஆனால், எதிர்மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 3-ம் அயிட்ட சொத்திற்கும் மனுதாரரின் 1-ம் அயிட்டச் சொத்தின் வழியாக PVC பைப்லைன் மூலமாக தண்ணீர் கொண்டு செல்வதாவும், அதை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என எதிர் மனுவுரையில் கூறப்பட்டுள்ளார். இந்நிலையில், எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமிக்க எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என தெரிகிறது. அசல் வழக்கு வசதியுரிமை அடிப்படையில் விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், தாவா 3 அயிட்ட சொத்துக்களில் வழியாக செல்லும் நிலத்தடி நீர் குழாய் அமைப்பு மற்றும் தாவா 1, 2-வது அயிட்ட சொத்தில் விவசாயம் செய்ய நீர் கொண்டு வரப்படும் முறை, நிலத்தடியில் அமைக்கப்பட்டுள்ள பைப்லைன் மற்றும் எதிர்மனுதாரின் 3-வது அயிட்டச் சொத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் PVC பைப்லைன் அமைந்துள்ள விதம் ஆகியவற்றை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வது அசல் வழக்கை தீர்மாணிப்பதற்கு அவசியமானதாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதே நீதியின்பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**6. இறுதியாக,**

***இம்மனு செலவுத் தொகையின்றி அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு.நிஷாந்த் என்பவர் நியமிக்கப்பட்டு, ஆணையருக்கு ஊதியமாக ரூ.7,000/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆணையரின் ஊதியத்தை மனுதாரர் நேரடியாக ஸ்தல ஆய்வின் போது செலுத்த வேண்டுமென்றும், ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து, ஸ்தலத்தை பார்வையிட்டு மனு 1 முதல் 3-வது அயிட்டச் சொத்துக்களில் அமைந்துள்ள நிலத்தடி நீர் பைப்லைன் மற்றும் தண்ணீர் கொண்டு செல்லும் விதம் மற்றும் மனுச் சொத்தின் இயற்கையமைப்பு குறித்து பார்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கையை 22.09.2025 தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.***

***மீண்டும் அழைக்க 22.09.2025***

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.08.20 09:45:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

<u>இருதரப்பிலும் சாட்சி சான்றாவணங்கள்</u> -இல்லை-

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.08.20 09:45:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

FAIR ORDER

I.A.1 / 2025

O.S.47 / 2025

20.08.2025